**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 11/2024**

2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 05 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய முருகவேல் **PW2.** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 05.06.2025

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | முருகவேல் | | |
| Father /Husband Name | : | கிருஷ்ணமூர்த்தி | Court | : |
| Village | : | நில அளவையர், தில்லையாடி | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 49/2025 | | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

முதல் விசாரணை:

நான் தற்போது தில்லையாடி குறுவட்ட நில அளவையராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். சுந்தரேசன் த/பெ. சொர்ணபுரீஸ்வரன் என்பவர் புல எண் 30/20B1 என்ற தனது இடத்தை அளவீடு செய்து தருமாறு மனு கொடுத்தார். அந்த மனுவின் அடிப்படையில் மேற்படி இடத்தை அளவீடு செய்தபோது அவரது ஆவணத்தில் கண்ட விஸ்தீரணமும் நான்கெல்லையிலும் எவ்வித மாற்றமும் இல்லை. ஆனால் புல எண் மட்டும் 31/5 என்பதற்கு பதிலாக புல எண் 30/20B1 என தவறுதலா குறிப்பிடப்பட்டுள்ளது. இது குறித்து நான் சான்று வழங்கினேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் சான்று நான் வழங்கியது தான். **அந்த சான்று வாசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தற்போது மேற்படி புல எண் 31/5 ஆனது புல எண் 31/40 ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது.